## தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் படி தகவல் கோரும் மனு

அனுப்புநர்

கு.உமாதேவி 9443152326
க/பெ. மு.கு.குழந்தைசாமி
முத்தாயிபாளையம் அஞ்சல்,
கணபதிபாளையம் வழி,
ஈரோடு - 638153.

பெறுநர்

பொது தகவல் அலுவலர் மற்றும்
துணை பொது மேலாளர்,
Power Grid Corporation of India Ltd,
கே.ஆர். தோப்பூர், தாரமங்கலம் ஸ்டீல் பிளேண்ட் ரோடு,
டி.கூனக்காபாடி (அஞ்சல்),
சேலம் - 636502.

ஐயா,

**பொருள்:** தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் படி ஈரோடு மாவட்டத்தில் பவர் கிரிட் நிறுவனம் மூலம் அமைக்கப்பட்டுள்ள ராய்கர் - புகலூர் 800KVA உயர் அழுத்த மின்பாதை பற்றிய தகவல்கள் கோருவது சம்பந்தமாக.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். எனக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் படி மனு கட்டணமாக ரூ.10/-க்கு indian postal order இணைத்துள்ளேன். நான் கீழ்கண்டவாறு கோரியுள்ள தகவல்களை உரிய சான்றுடன் வழங்க வேண்டுகிறேன். சான்றிட்ட ஒளி நகல்கள் (Photocopies) எடுக்க வேண்டிய செலவுத் தொகையை தாங்கள் தெரிவித்தவுடன் செலுத்த சம்மதிக்கிறேன். ஒளி நகல் செலவுத் தொகை செலுத்த வேண்டிய வங்கி கணக்கு எண் தெரிவிக்கவும்.

| வ.எண் | கோரப்பட்டுள்ள விபரம் |
|---|---|
| 1. | ஈரோடு மாவட்ட நிர்வாகத்திடமிருந்து பவர்கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா (PGCIL) நிறுவனத்திற்காக ஈரோடு மாவட்டத்தில் ராய்கர், புகலூர் 800KVA உயர்மின் அழுத்த மின்பாதை (HVDC) அமைக்க வேண்டி அனைத்து நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட முன் நுழைவு அனுமதி கடித நகல்கள். |
| 2. | பவர்கிரிட் நிறுவனத்தின் ஈரோடு மாவட்டம், புஞ்சை காளமங்கலம் கிராமம் ரீ.ச. எண்.361-ல் (மின் கோபுர எண்.184/2) அமைக்கப்பட்டுள்ள மின் கோபுரம் எந்த வகையை (Type of Structure) சார்ந்தது? அதன் உயரம், எடை, நீளம், அகலம் மற்றும் அமைப்பு வரைபட நகல்கள் வழங்கவும். |
| 3. | பவர்கிரிட் நிறுவனம் 800 KVA உயர் மின்பாதை ராய்கர் முதல் புகலூர் வழிபாதையில் ஈரோடு மாவட்டத்தில் அமைக்கும் முன்பாகவும் (Line Charging) மின்னோட்டம் துவங்கும் போதும் பொது மக்களுக்கு கொடுக்கப்பட்ட அனைத்து நாளிதழ்களின் பொது அறிவிப்பு (Press notice copy with full page covering area edition) மொழி வாரியான நகல்கள் வழங்கவும். |

DM/TLC
pl discuss.

पावरग्रिड. सेलम
POWERGRID, SALEM
सं. / No 742 दि. / Dt 14-12-2022
उप केन्द्र/SS टी.एल.एम/TLM
एम.आर.टी/MRT सि&एम/C&M
अनु. / MTC मा.सं. / HR प्रच / Opm

POWERGRID, SRTS-II HQ
आवक/INWARD
सं/No. 38
दि/Dt. 26/12/22
बेंगलूरु/Bengaluru

| | |
|---|---|
| 4. | பவர்கிரிட் நிறுவனம் 800 KVA உயர் மின்பாதை ராய்கர் முதல் புகலூர் வழிபாதையில் ஈரோடு மாவட்டத்தில் அமைக்க நடத்திய கருத்து கேட்பு கூட்டங்கள், தீர்மானம் மற்றும் அதன் புகைப்படங்கள் தேதி வாரியாக அனைத்து நகல்கள் வழங்கவும். |
| 5. | பவர்கிரிட் நிறுவனம் 800 KVA உயர் மின்பாதை ராய்கர் முதல் புகலூர் வழிபாதையில் ஈரோடு மாவட்டத்தில் அமைக்க எந்தெந்த வருவாய் கிராமங்களில் எந்தெந்த புல எண்களில் செல்கிறது.? |

நான் கோரியுள்ள மேற்கண்ட தகவல்களை உரிய கால அளவுக்குள் எனக்கு வழங்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

K.உமாதேவி

இடம் : முத்தாயிபாளையம்

தேதி : 13-12-2022.

இணைப்பு :

Indian Postal Order

No : 43F 304170

Date : 13.12.2022

Payable at Salem

Favouring Power Grid Corporation Of India Ltd